**கொய்யா:**

**1. காய் துளைப்பான் கோனேகீதஸ் பங்டிபெராலிஸ்**

**சேதத்தின் அறிகுறி:**

- புழுக்கள் காய்களில் துளையிட்டுச் சென்று உண்ணும், பின்பு
- காய்ந்து பழுக்கும் முன்னரே விழுந்துவிடும்

**பூச்சியின் விபரம்:**

- புழு பழுப்பு நிற தலையையும், இளஞ்சிவப்பு உடலில் சிறு மெல்லிய உரோமங்களையும் பெற்றிருக்கும்
- தாய்ப்பூச்சி சிறியதாக மஞ்சள் நிற இறக்கையில் நிளைய கருப்புப் புள்ளிகளுடன் இருக்கும்
- ஆண்பூச்சி உம்பின் பின்பகுதி நுணியில் கருமையான முடிக்கொத்தும் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- தாக்கப்பட்ட பழங்களை எழுத்து அழித்து விடவும்
- விளக்குப்பொறி 1 எக்டர் வைத்து தாய்ப்பூச்சியின் நடமாட்டத்தை கண்காணிக்கலாம்
- மாலத்தியான் 50 இ.சி. 0.1 சதவிதம் (அ) என்டோசல்பான் 35 இ.சி 0.07 சதவிதம் மருந்தினை பூக்கும் தருணத்திலும் காய்ப்பிடிக்கும் தருணத்திலும் தெளிக்கவேண்டும்

**2. பழம் துளைப்பான் வீரச்சோளா ருசோக்கிரேட்டல்**

**சேதத்தின் அறிகுறி:**

- காய்கள் துளைக்கப்பட்டு விதைகள் சேதப்படுத்தப்பட்டிருக்கும்

**பூச்சியின் விபரம்:**

- புழு அழுக்கடைந்த பழுப்பு நிறமாக சிறிய உரோமங்களுடன் இருக்கும்
- தாய் வண்ணத்துப்பூச்சி நீலமும் பழுப்புமாக அழகான முன் சிறக்கைகளில் ஆரஞ்சு நிற புள்ளிகளுடன் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- தாக்கப்பட்ட பழங்களை எடுத்து அழித்துவிட வேண்டும்
- விளக்குப்பொறி 1 எக்டர் வைத்து தாய்ப்பூச்சியின் நடமாட்டத்தை கண்காணிக்கலாம்
- மாலத்தியான் 50 இ.சி 0.1 சதவிதம் (அ) என்டோசல்பான் 35 இ.சி 0.07 சதவிதம்

**3. பழம் துளைப்பான் ராபாலா வருணா:**

**சேதத்தின் அறிகுறி:**

- புழுக்கள் பூ மொட்டுகளிலும் பழங்களிலும் காணப்படும்

**பூச்சியின் அறிகுறி:**

- வண்ணத்துப்பூச்சி சிவப்பாக காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- தாக்கப்பட்ட பழங்களை எடுத்து அழித்துவிட வேண்டும்
- விளக்குப்பொறி 1 எக்டர் வைத்து தாய்ப்பூச்சியின் நடமாட்டத்தை கண்காணிக்கலாம்
- மாலத்தியான் 50 இ.சி 0.1 சதவிதம் (அ) என்டோசல்பான் 35 இ.சி 0.07 சதவிதம்

**4. கொய்யாப்பழ ஈ பேக்ரோசெரா டைவர்சஸ்:**

**சேதத்தின் அறிகுறி:**

- புழுக்கள் மற்றும் ஈக்கள் பாதி கணிந்த பழங்களையே தாக்கும்
- பழத்தின் மீது முட்டையிட துளைகள் காணப்படும்
- பழத்திலிருந்து துர்நாற்றம் வீச துவங்கும்

**பூச்சியின் விபரம்:**

- பூச்சியின் கால்கள் மஞ்சள் நிறமாகவும் இறக்கைகள் பழுப்பு நிறமாகவும் காணப்படும்

**கட்டுப்படுத்தப்பட்ட முறை:**

- தாக்கப்பட்ட பழங்களை எடுத்து அழித்துவிட வேண்டும்
- கோடை உழவு செய்து பழ ஈயின் கூட்டுப்புழுக்களை அழிக்கலாம்
- மெத்தில் யூஜனால் கவர்ச்சிப் பொறியை ஹெக்டர்க்கு பத்து வீதம் வைத்து பழ ஈக்களை கவர்ந்து அழிக்கலாம்

- மெத்தில் யூஜீனால் மற்றும் மாத்தியான் 50 இ.சி 1:1 என்ற கலவையில் கலந்து கவர்ச்சிப் பொறியில் வைத்து ஈக்களை அல்லது மாலத்தின் 50 இ.சி 0.05 சதவிதம் மருந்தினை தெளிக்கலாம்
- மொலஸஸ் அல்லது வெல்லத்தை 10 கிராம் / லிட்டர் கீழ்வரும் ஏதாவது ஒரு பூச்சி மருந்தினை இரண்டு முறை தெளிக்கவும்
- பென்தியான் 100 இ.சி 1 மி.லி / லிட்டர்
- மாலத்தியான் 50 இ.சி 2 மி.லி / லிட்டர்
- டைமித்தோயேட் 30 இ.சி 1 மி.லி / லிட்டர்

(பழங்கள் பழுப்பதற்கு முன்னால் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை)

- ஒப்பியல் காம்பன்ஜேட்டஸ், ஸ்பாலன்ஜியா பிலிப்பைனன்ஸிஸ், டையகாஸ்மிமார்பா கிரெளசி இவ்வொட்டுண்ணிகளை களத்தில் விட்டு பழ ஈயினை கட்டுப்படுத்தலாம்

**5. மரப்பட்டைப்புழு (இன்டார்யேலா டெரா ஒனிஸ்):**

**தாக்குதலின் அறிகுறிகள்:**

- பட்டை துளைப்பான் இளம் வயது மரங்களை அதிக அளவில் தாக்குகிறது
- புழு மரப்பட்டையை துளைத்து உள்ளே சென்று வலைப்பின்னலை உருவாக்கி உணவுக் கடத்தும் திசுவை உண்கிறது

- புழு இரவு நேரங்களில் மட்டும் மரப்பட்டையை உண்ணுகிறது பகல் நேரங்களில் மரத்துளைகளில் மறைந்து வாழ்கிறது

**பூச்சியின் விபரம்:**

- புழு - பழுப்பு நிறத்தில் இருக்கும்
- வண்டு - மஞ்சள் நிறமுடையது முன் இறக்கையில் பழுப்பு நிற கோடும், பின் இறக்கையில் வெண்ணிற பட்டைக்கோடு இருக்கும்
- ஆண் வண்டு சிறியதாகவும் பெண் வண்டு பெரியதாகவும் இருக்கும்

**6. தேயிலைகொசு ஹீலோவெல்டிஸ் ஏன்டோனி**

**சேதத்தின் அறிகுறி:**

- இலை மற்றும் பூங்கொத்துகளில் நுனிக்கருத்துகள் வாடிவிடும்
- பூச்சி சாறு உறிஞ்சிய இடங்களில் ஈரமான பழுப்பு நிறக் கசிவு தெரியும்

**பூச்சியின் விபரம்:**

- செந்நிற உடலில் கருநிற தலையைக் கொண்ட மெல்லிய நாவாய்ப்பூச்சி

**கட்டுப்படுத்தும் முறை:**

- தாக்கப்பட்ட பகுதிகளை சேகரித்து அழிக்கவும்
- பூக்கும் தருணத்தில் மாதத்திற்கு இருமுறை மாலத்தியான் 50 இ.சி 0.2 சதவிதம் (அ) என்டோசல்பான் 35 இ.சி 0.07 சதவிதம் ஏதாவது ஒரு பூச்சிமருந்தினை தெளிக்கலாம்

**7. பச்சை செதில் பூச்சி காக்கஸ் விடிஸ்:**

**சேதத்தின் அறிகுறி:**

- குஞ்சுகளும் தாய்ப்பூச்சிகளும் இலைகளின் சாறுகளை உறிஞ்சும்
- இலைகள் மஞ்சலாக மாறும்

**பூச்சியின் விபரம்:**

- குஞ்சுகள் இளம் மஞ்சள் நிறத்தில் காணப்படும்
- பூச்சிகள் தட்டையாகவும் மேற்பாகம் லேசாக குவிந்து மஞ்சள் கலந்த பச்சை நிறமாக இருக்கும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- தாக்குதல் ஆரம்பிக்கும் பருவத்திலேயே கிளைகளை வெட்டி அழித்துவிட வேண்டும்
- மானோகுரோட்டோபாஸ் 1 மி.லி / லிட்டர்

  (அ)

  - பென்தோயேட் 1 மி.லி / லிட்டர்
- இரண்டு வாரங்கள் கழித்து மரத்திற்கு 20 என்ற விகிதத்தில் கிர்டோலேமஸ் மான்ட்ரொஸரி பொரிவண்டை விடலாம்
- பாஸ்போமிடான் 215 மிலி (அ) மானோகுரோட்டோபாஸ் 40 மிலி (அ) எண்டோசல்பான் 80 மிலி மருந்து தண்ணீருடன் கலந்து தெளித்தால் நாற்றங்காலில் செதில் பூச்சியின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்

- நடவு வயலில் - பாஸ்போமிடான் 300 மிலி மானோகுரோட்டோபாஸ் 30 மிலி மருந்தைத் தெளிக்கவும்

**8. மாவுப்பூச்சி பெரிசியா விகேட்டா:**

**சேதத்தின் அறிகுறி:**

- இலை மற்றும் காய்களின் மீது அடை அடையாக மாவு போன்று காணப்படும்
- முதிர்ந்த இலைகள் மஞ்சள் நிறமாக காணப்படும்

**பூச்சியின் விபரம்:**

- பெண் பூச்சியின் பிற்பகுதியில் நீண்டவால் போன்று காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- முட்டை குவியலையும் குழுக்களையும் எடுத்து அழிக்க வேண்டும்
- கூட்டமாக காணப்படும் புழுக்களை தீயிட்டு அழிக்க வேண்டும்
- விளக்குப் பொறி வைத்து கவர்ந்து அழிக்கலாம்
- மெதில் டெமட்டான் 25 இ.சி 0.05 சதவிதம்

  (அ)

  டைமீதோயேட் 30 இ.சி. 0.06
- மரத்திற்கு 20 என்ற விகிதத்தில் கிர்ப்டோலேமஸ் மான்ட்ரொஸரி பொறிவண்டை விடலாம்

**9. வெள்ளை ஈ அலிரோடைக்கஸ் டிஸ்பர்சஸ்:**

**சேத்தின் அறிகுறி:**

- குஞ்சுகளும் தாய்ப்பூச்சிகளும் இலைகளில் உள்ள சாற்றை உறிஞ்சும்
- பூச்சிகளின் தேன் போன்ற கழிவுப் பொருளின் படிவால் இலை மற்றும் பூங்கொத்துக்களில் கருமையான பூசணம் வளரும்
- இலைகள் மஞ்சளாக மாறும்
- தாக்கப்பட்ட இலைகள் உதிர்ந்துவிடும்

**பூச்சியின் விவரம்:**

- சிறு வெண்ணிற பூச்சிகள் இலைகளில் அடை அடையாக மாவுப்பூச்சிகளைப் போன்று காணப்படும். அதிகாலையில் மிகவும் சுறுசுறுப்பாக காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- வயலை சுத்தமாக வைக்க வேண்டும்
- களைகளை அகற்ற வேண்டும்
- மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறி வைத்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்
- தாக்குதல் அதிகமாக இருந்தால் இமிடாகுளோப்ரிட் 200 எஸ்.எல் 0.01 சதவீதம் (அ) ட்ரை அசோபாஸ் 40 இ.சி. 0.06 சதவிதம் தெளிக்கலாம்
- வேப்ப எண்ணெய் 3 சதவிதம் அல்லது வேப்பங்கொட்டை சாறு 5 சதவிதம் தெளிக்கலாம்

- கிரிப்டோலேமஸ் மாண்டரொஸரி பொறிவண்டை விட்டு கட்டுப்படுத்தலாம்
- என்கார்சியா ஷெய்டெரிஸ், என்கார்சியா காடெல்பே ஆகிய ஒட்டுண்ணிகளை விடலாம்